**செய்தி வெளியீடு எண்: 635** **நாள்: 20.10.2012**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (20.10.2012) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சென்னை மாநகர ஒளிபரப்பு சேவையினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள்.

கேபிள் டிவி தொழிலில் உள்ள ஏகபோகத்தை தடுத்து அனைவருக்கும் தொழில் செய்ய வாய்ப்பு வழங்கப்படும் என்றும், அனைத்து மக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டிவி இணைப்பு கொடுக்கப்படும் என்றும் தமிழக மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிடும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2.9.2011 அன்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் ஒளிபரப்பு சேவையை தொடங்கி வைத்தார்கள். இதன் மூலம், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழக மக்களுக்கு குறைந்த செலவில் நிறைந்த சேவையை அளித்து வருகிறது.

4.94 லட்சம் பேரை சந்தாதாரர்களாக கொண்டிருந்த தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தற்போது 58 லட்சம் சந்தாதாரர்களுடன் சென்னை நீங்கலாக, தமிழகத்தின் ஏனைய 31 மாவட்டங்களில், சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், பிரபலமான கட்டண சேனல்கள் உட்பட 100 சேனல்களை மாதம் 70 ரூபாய் என்ற குறைந்த கட்டணத்தில் வழங்கி வருகிறது. இந்திய அளவில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் அதிக சந்தாதாரர்களைக் கொண்ட தனிப்பெரும் கேபிள் டிவி நிறுவனமாக (Multi System Operator) திகழ்கிறது. அகில இந்திய அளவில் குறைந்த கட்டணத்தில் அதிக எண்ணிக்கையிலான சேனல்களை வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்கு கேபிள் ஆபரேட்டர்கள் மற்றும் பொதுமக்கள் சிறந்த வரவேற்பு அளித்து வருகிறார்கள்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் ஒளிபரப்பு சேவையினை சென்னை மாநகர பொதுமக்களுக்கு வழங்கிட சென்னையில் உள்ள 2000 கேபிள் டிவி ஆபரேட்டர்கள் விண்ணப்பித்துள்ளனர். இவர்களிடம் பதிவு செய்துள்ள சந்தாதாரர்களின் எண்ணிக்கை சுமார் 13 லட்சம் ஆகும். சிக்னல் கேட்டு விண்ணப்பித்துள்ள கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு படிப்படியாக சிக்னல் வழங்கப்படும்.

இந்திய அரசின் விதிமுறைகளின்படி சென்னை உள்ளிட்ட நான்கு பெருநகரங்களில் கேபிள் டிவி சேவை டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின்படி இதற்கு தேவையான செட்டாப் பாக்ஸ் போன்ற உபகரணங்களை விரைந்து வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படி சென்னை மாநகர மக்கள் கேபிள் டிவி ஆபரேட்டர்களிடம் 500 ரூபாய் முன் பணமாக செலுத்தி செட்டாப் பாக்ஸ்களை பதிவு செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுவரை சென்னை மாநகரப் பகுதியில் செட்டாப் பாக்ஸ் கேட்டு சுமார் 8 லட்சம் பேர் பதிவு செய்துள்ளனர். அவ்வாறு பதிவு செய்தவர்களுக்கு விரைவில் செட்டாப் பாக்ஸ்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் 31 மாவட்டங்களில் வழங்கப்பட்டு வரும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சேவை சென்னை மாநகர மக்களும் பெற்று பயனடையும் வகையில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சென்னை மாநகர ஒளிபரப்பு சேவையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள். இதன் மூலம், சென்னையில் உள்ள இந்நிறுவனத்தின் கட்டுப்பாட்டு அறையிலிருந்து அனலாக் முறையில் 80 சேனல்கள், டிஜிட்டல் முறையில் 75 சேனல்கள், என மொத்தம் 155 சேனல்கள் அனைத்து தரப்பு மக்களும் கண்டுகளிக்கும் வகையில் தமிழ், ஆங்கிலம், இந்தி, உட்பட பல்வேறு மொழிகளில் பொழுதுபோக்கு, விளையாட்டு, இசை, செய்திகள், நகைச்சுவை, சிறுவர்களுக்கான சேனல்கள் உள்ளிட்ட பல்வேறு சேனல்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளது. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழகத்தின் பிற பகுதிகளைப் போன்றே சென்னை மாநகர ஒளிபரப்பு சேவைக்கு 100 சேனல்களுக்கு மாதம் 70 ரூபாய் கட்டணமாக நிர்ணயித்துள்ளது. விருப்பப்படும் கூடுதல் சேனல்களை காண்பதற்கு தனியாக கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத் தலைவர், தகவல் தொழில் நுட்பவியல் துறைச் செயலாளர், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 20.10.2012